**கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.**

**OS.No. 289/2014**
திருமதி. லட்சு மி

க/பெ. ரத்தினசாமி குமார் (D.W.–1) **24.03.2026**

5ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று திறந்த நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது. 20,21,26 பிரதிவாதிகள் தரப்பில் முறையீடு இல்லை. சாட்சியை குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

1. தாவா சொத்துக்கள் ஒரு மலையா கவுண்டருக்கு பாத்தியம் என்றால் சரி. அவருக்கு நான்கு வாரிசுகள் என்றால் சரி. 1946 ஆம் வருட பாகப்பிரிவினை பத்திரத்தில் மலையாக் கவுண்டருக்கு பத்து வாரிசுகள் என்று சொல்லப்பட்டுள்ளது தவறு என்றால் சரி. 1946 ஆம் வருட பாகப்பிரிவினை ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள ராமசாமி, தங்கமுத்து ஆகியோர் மலையா கவுண்டருக்கு வாரிசுகள் இல்லை என்றால் சரி. அவர்களுக்கு பாத்தியப்பட்ட சுயாஜித சொத்துக்களை தேவையில்லாமல் சேர்த்து 1946 ஆம் வருட பாகப்பிரிவினை ஆவணத்தில் பாகம் பிரித்து கொடுக்கப்பட்டுள்ளது என்றால் ஆமாம். அந்த ஆவணத்தின்படி சொத்துக்கள் 1/7 ஆக பிரிக்கப்பட்டுள்ளது என்றால் ஆமாம். அதில் ஒரு பங்கு என்னுடைய தகப்பனார் லிங்கைய கவுண்டருக்கு பாத்தியம் என்றால் ஆமாம். அந்த சொத்து ஏ பட்டியலிட்ட சொத்தா காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் ஆமாம்.

2. வாரிசுகள் நான்கு நபர்கள் என்பதால் சொத்துக்கள் அந்த ஆவணத்தின் படி நான்காக தான் பிரித்திருக்க வேண்டும் என்றால் சரி. சீதன

செட்டில்மெண்ட் ஆவணம் வள்ளியம்மாளுக்கு எழுதிக் கொடுக்காமல் கண்ணம்மாளுக்கு எழுதிக் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் ஆமாம். 1/8 பாகம் எழுதிக் கொடுத்ததாக சொல்வது தவறு என்றால் சரியல்ல. ¼ பாகம் சொத்துக்கள் பிரிக்கப்பட்டு இருக்க வேண்டும் ⅛ பாகம் சொத்துக்கள் பிரிக்கப்பட்டுள்ளதால் மீதி பாகங்கள் அப்படியே உள்ளது என்றால் சரியல்ல. லிங்கைய கவுண்டருக்கு ⅛ பாகம் வருமா அல்லது 1/4 பாகம் வருமா என்றால் நாளில் ஒரு பாகம் வரும் அதனால் மீதம் சொத்துக்கள் உள்ளது என்றால் சரியில்ல. சொத்துக்களில் பாகம் கேட்டு தான் வாதி வழக்கு தாக்கல் செய்து உள்ளார் என்றால் சரியல்ல. வாதி அவருடைய அக்காளிடம் தான் பாகம் கேட்க வேண்டும். 1946 ஆம் வருட ஆவணம் சொத்துக்களை தவிர வேறு சொத்துக்கள் உள்ளது என்றால் சரி.

3. சர்வே எண்.421/1 சொத்துக்களை பற்றி தெரியுமா என்றால் தெரியாது. அதுமட்டுமில்லாமல் பத்து சர்வே எண்களில் சொத்துக்கள் உள்ளதைப் பற்றி தெரியுமா என்றால் தெரியாது. பி.வா.சா.ஆ–1 ஆவணம் யாருக்கிடையே ஏற்பட்டது என்றால் நான்கு நபர்கள் கிடையே ஏற்பட்டது. மலையா கவுண்டர் மகன் தங்கமுத்து கவுண்டர். தங்கமுத்து கவுண்டர் மகன் குமாரசாமி. மாரப்ப கவுண்டர் மகன் பழனிச்சாமி. மலையா கவுண்டர் மகன் சுப்பன்ன கவுண்டர். சுப்பன்ன கவுண்டர் மகள் நாச்சம்மாள். ராமசாமி கவுண்டர் மனைவி கண்ணம்மாள் பழனிச்சாமி கவுண்டர் மனைவி கண்ணம்மாள். பழனிச்சாமி கவுண்டர் மகன் சின்னச்சாமி,நாச்சிமுத்து, காளியப்ப கவுண்டர் மகன் கந்தசாமி ஆகியோரிடையேயே ஏற்பட்ட பாகப்பிரிவினை ஆவணம் என்றால் ஆமாம்.

4. பி.வா.சா.ஆ–1 ஆவணத்தில் வள்ளியாத்தாள் ஒரு தரப்பினராக இல்லை என்றால் சரி. வள்ளியாத்தாள் தான் தரப்பினராக பி.வா.சா.ஆ–1 ஆவணத்தில் சேர்க்காததால் அந்த ஆவணம் செல்லாது என்றால் சரியல்ல. வள்ளியாத்தாள்

அவருக்கு உரிய சொத்தை அவருடைய சகோதரனிடமிருந்து தான் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று சாட்சி தனிச்சையாக முன்வந்து கூறு தாவா சொத்துக்களில் வாதிக்கு பாகம் தரக்கூடாது என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

K R KANNAN

Digitally signed by K R KANNAN
Date: 2026.03.24 15:49:02 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.